www.tamilarangam.net

# தோழர் க.பத்மநாபா

## சர்வதேசியவாதி க. பத்மநாபா

— பெ. முத்துலிங்கம்

அகால மரணமடைந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா அவர்கள், ஈழ விடுதலை கெரில்லாப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவார். 1970களில் தமது அரசியல் பயணத்தை மேற் கொண்ட இவர் முதலில் தமிழரசு கட்சியின் இளைஞர் பிரிவில் இணைந்து செயற்பட்ட



போதிலும் இடதுசாரி கொள்கையின் பால் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே பின்னர் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியிலிருந்து விடுபட்டு இளைஞர்கள் தனித்துவமாக செயற்பட வேண்டுமெனக் கருதினார். இதன் பயனாக இவரது முயற்சியினால், 1974 இறுதியில் ஈழ விடுதலை இயக்கம் உருவாக்கப்பட்டது. இதுவே வடக்கு கிழக்கின் முதலாவது இடதுசாரி கருத்துக்களைக் கொண்ட இராணுவ இயக்கமாகும். இவ்வியக்கத்திற்கு நிதி திரட்டும் வகையில் நடாத்தப்பட்ட புலோலி வங்கிக் கொள்ளையில் இவர் பங்கு பற்றியதுடன் 1976ல் லண்டனுக்கு உயர் கல்வி கற்கச் சென்றார்.

லண்டனில் பெற்றோர்களின் விருப்பப்படி கல்வி கற்பதில் அக்கறை காட்டாத திரு. க. பத்மநாபா அங்கிருந்த ஏனைய நாடுகளின் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் உறவை மேற் கொண்டதுடன் லண்டனில் தங்கியிருந்த இடதுசாரி கொள்கையின் பால் நம்பிக்கை கொண்டவர்களுடன் இணைந்து ஈரோஸ் என்ற அமைப்பை உருவாக்குவதில் ஓர் பங்காளராகச் செயற் பட்டார்.

ஆரம்பம் முதலே ஓர் சர்வதேச கண்ணோட்டத்தைக் கொண்டிருந்த இவர் மலையக மக்களின் விடுதலைக்கும் சிங்களத் தொழிலாளர் விவசாயிகளின் விடுதலைக்கும் தமிழ் போராட்டம் பங்களிக்க வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டிருந்தார். 1981ல் ஈரோஸ் அமைப்பிற்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக அதிலிருந்து விலகி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார். இவ் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் 1982ல் இலங்கை வந்த திரு. க. பத்மநாபா 83 ஜூலை கலவரம் நடை பெறும் வரை தென்னிலங்கையிலிருந்தே செயற் பட்டார். ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் உழைக்கும் சிங்கள மக்களின் ஆதரவு கட்டாயம் அவசியம் எனக் கருதிய இவர் தென்னிலங்கையைச் சார்ந்த இடது சாரிகளுடனும் உறவை ஏற்படுத்திக் கொண்டார், தென்னிலங்கைத் தீவிரவாதிகள் சிலருக்கு எதிராக அரசை கவிழ்க்கச் சதிப் புரட்சி மேற் கொண்டார்கள் எனத் தொடரப்பட்ட வழக்கில் இவரும் ஓர் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளமையிலிருந்து இவர் எந்தளவு தூரம் சர்வதேசியவாதியாக செயற்பட்டுள்ளார் என்பது புலனாகும். மலையக மக்களின் பால் அதிகம் அக்கறை காட்டிய இவர் தமது ஆரம்ப கல்வியை பதுளையிலேயே கற்றார்.

தென்னிலங்கையின் இடதுசாரிகளுடன் உறவை பலப்படுத்திக் கொள்வதில் அக்கறை காட்டிய திரு. க. பத்மநாபா ஈழ விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதிலும் அதிக சிரத்தை காட்டினார். இதன் விளைவாகவே 1985ல் ஈழ விடுதலை இயக்கங்கள் ஒன்றிணைந்து ஈழ தேசிய விடுதலை முன்னணியை உருவாக்கின.

தமிழ் நாட்டின் அரசியற் கட்சிகள் மத்தியில் குறிப்பாக இடதுசாரி அரசியற் கட்சிகள் மத்தியில் நல்லுறவை உருவாக்கிக் கொண்டுள்ளதுடன் காலஞ்சென்ற திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்த முதற் தீவிரவாதத் தலைவர் இவரே ஆவார். திரு. க. பத்மநாபா அவர்கள் இன விடுதலை இனங்களுக்கிடையில் ஐக்கியம் தொழிலாளர் விடுதலை என்பனவற்றையே தமது அடிப்படைச் சித்தாந்தமாகக் கொண்டுள்ளார் என்பது அவர் ஆற்றிய உரைகளில் இருந்து தெளிவாகத் தெரிகின்றது.

மேலும் திரு. பத்மநாபா வினாவில் தமது இயக்கத்தின் வேலைத் திட்டங்கள் என்ன என்பதை விளங்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் மாணவர் முன்னணி ஈழ பெண்கள் விடுதலை முன்னணி மலையகப் பட்டாளிகள் முன்னணி கடற் தொழிலாளர் முன்னணி கிராம விவசாய தொழிலாளர் முன்னணி அமைக்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளதுடன இவையனைத்தும் ஈ. பி. ஆர். எல். எப். பின் வெகுஜன வேலைகள் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் போதை வஸ்துக் கடத்தல் சிங்கள மக்களைக் கொல்லுதல் போன்றவற்றைக் கடுமையாக எதிர்த்து வந்துள்ளார். மேற் கூறியதிலிருந்து பத்மநாபா எவ்வாறான மக்களின் விடுதலைகளின் பால் அக்கறை கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது.

பொதுவாக அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த பத்மநாபாவுடன் இணைந்து செயற்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபை நிதி அமைச்சர் திரு. பி. கிருபாகரன் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. யோகசங்கரி போன்றோர்களினது மறைவு தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது முழு நாட்டிற்கே பேரிழப்பாகும்.

தினகரன் வாரமஞ்சரி 1990 ஜூன் மீ 24 உ ஞாயிற்றுக்கிழமை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்